Kurusady
CATECHISM

# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 010 - டிசம்பர் 12, 2021 முதல் டிசம்பர் 18, 2021 வரை.**

## பத்தாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

உலக நாடுகளில் திருவழிபாட்டு இயக்கம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

திருவழிபாடு பக்கம் எண் - 4 (10)

[ ] 1886

[ ] 1800

[ ] 1789

[ ] 1796

**கேள்வி 02**

திருவழிபாட்டின் மொழியும் பாடமுமாக இருப்பது எது?

திருவழிபாடு பக்கம் எண் - 6 (12)

[ ] கடவுளை தந்தை மகன் தூய ஆவியார் என அழைப்பது

[ ] இயேசுவை தந்தை மகன் என அழைப்பது

[ ] கடவுளை அப்பா தந்தாய் என அழைப்பது

[ ] கடவுளை அப்பா பிதாவே என அழைப்பது

**கேள்வி 03**

திருவழிபாட்டு வாழ்வை வாழ்வதும் அதன் மேன்மையான கொடைகளை அனுபவிப்பதுமே கிறிஸ்தவர்களின் தலை சிறந்த கடமைகள் ஆகும் என்று கூறியவர் யார்?

திருவழிபாடு பக்கம் எண் - 7

[ ] திருத்தந்தை 16-ம் பெனடிக்ட்

[ ] திருத்தந்தை 12-ம் பீயுசு (பத்திநாதர்)

[ ] திருந்தந்தை 2-ம் ஜாண்பால்

[ ] திருத்தந்தை பிரான்சிஸ்

**கேள்வி 04**

கோவிலில் மெழுகுத்திரிகளை ஏற்றுவது எதைக் காட்டுகிறது?

திருவழிப்பாடு பக்கம் எண் - 13 (35)

[ ] இயேசு இருட்டிலிருந்து வெளிச்சத்தை கொண்டு வர

[ ] இயேசு நம்மை புது படைப்பாக மாற்ற

[ ] இயேசு உலகின் ஒளியாய் இருக்கிறார்

[ ] இயேசு உலகின் வழிகாட்டி

**கேள்வி 05**

திருப்பலியில் எவ்விதமாவு அப்பம் உபயோகிக்கப் பட வேண்டும்?

திருவழிபாடு பக்கம் எண் - 14 (42)

[ ] கோதுமை

[ ] அரிசி

[ ] சோளம்

[ ] மைதா

**கேள்வி 06**

திருப்பலி எத்தனை பகுதிகளைக் கொண்டுள்ளது?

திருவழிபாடு பக்கம் எண் 45 (155)

[ ] மூன்று

[ ] நான்கு

[ ] இரண்டு

[ ] ஐந்து

**கேள்வி 07**

யூதர்கள் பேசிய மொழி எது?

திருவழிபாடு பக்கம் எண் 24 (84)

[ ] அரமேயிக்

[ ] கிரேக்கம்

[ ] இலத்தீன்

[ ] சீரியாக்

**கேள்வி 08**

தொடக்கத்தில் திருத்தூதர்கள் திருப்பலியையும், திருவழிபாட்டுச் சடங்குகளையும் எந்த மொழியில் நடத்தி வந்தார்கள்?

திருவழிபாடு பக்கம் எண் - 24 (84)

[ ] கிரேக்க

[ ] இலத்தீன்

[ ] சீரியாக்

[ ] அரமேயிக்

**கேள்வி 09**

மூன்றாம் நூற்றாண்டு வரை திருச்சபையின் பொதுவான மொழியாக இருந்தது எது?

திருவழிபாடு எண் - 25 (84)

[ ] அரமேயிக்

[ ] கிரேக்கம்

[ ] இலத்தீன்

[ ] கொப்திக்

**கேள்வி 10**

திருப்பலி உடைகளுள் எத்தனை நிறங்கள் உண்டு?

திருவழிபாடு எண் - 29 (103)

[ ] 5

[ ] 6

[ ] 4

[ ] 7

**கேள்வி 11**

சிவப்பு நிற திருப்பலி உடையின் அடையாளம் எது?

திருவழிபாடு எண் - 29 (103)

[ ] மகிழ்ச்சி, தூய்மை

[ ] இரத்தம், நெருப்பு, அன்பு

[ ] தவம்

[ ] துக்கம்

**கேள்வி 12**

திருப்பலி உடையில் வெள்ளை நிறத்தின் அடையாளம் எது?

திருவழிபாடு எண் - 29 (103)

[ ] மகிழ்ச்சி, தூய்மை

[ ] அன்பு

[ ] தவம்

[ ] துக்கம்

**கேள்வி 13**

பச்சை நிற திருப்பலி உடையின் அடையாளம் எது?

திருவழிபாடு எண் - 29 (103)

[ ] மகிழ்ச்சி

[ ] தவம்

[ ] துக்கம்

[ ] வளமை

**கேள்வி 14**

திருவிழாக்களில் எந்த நிற திருப்பலி உடை பயன்படுத்தப்படுகிறது?

திருவழிபாடு எண் - 29 (104)

[ ] வெள்ளை

[ ] சிவப்பு

[ ] கருப்பு

[ ] பச்சை

**கேள்வி 15**

தவக்காலத்தின் 4-ம் ஞாயிறு எந்த நிறம் பயன்படுத்தப்படுகிறது?

திருவழிபாடு எண் - 29 (105)

[ ] சிவப்பு

[ ] ஊதா

[ ] வெள்ளை

[ ] இளஞ்சிவப்பு நிறம்

**கேள்வி 16**

திருவருகைக் காலத்தின் 3-ம் ஆம் ஞாயிறு எந்த நிறம் பயன்படுத்தப்படுகிறது?

திருவழிபாடு எண் - 29 (105)

[ ] இளஞ்சிவப்பு

[ ] ஊதா

[ ] வெள்ளை

[ ] சிவப்பு

**கேள்வி 17**

ஒரு முறை நன்கு பாடுவது இருமுறை இறைவேண்டல் செய்வதற்குச் சமம் என்று கூறியவர் யார்?

திருவழிபாடு எண் - 31 (பெட்டி)

[ ] புனித எரோன்முஸ்

[ ] புனித அகுஸ்தீன்

[ ] புனித தோமா

[ ] புனித ஜெரோம்

**கேள்வி 18**

ஆயருக்கு உரிய சிறப்புச் சின்னங்கள் எவை? திருவழிபாடு எண் - 42 (144)

[ ] தலைச்சீரா

[ ] செங்கோல்

[ ] மோதிரம்

[ ] மேற்க்கூறிய அனைத்தும்

**கேள்வி 19**

தலைச்சீரா எதன் அடையாளம்?

திருவழிபாடு எண் -42 (144)

[ ] அதிகாரம்

[ ] புனிதம்

[ ] அன்பு

[ ] மேய்ப்புப் பணி

**கேள்வி 20**

செங்கோல் எதன் அடையாளம்?

திருவழிபாடு எண் -42 (144)

[ ] அதிகாரம்

[ ] புனிதம்

[ ] மாட்சி

[ ] அன்பு

**கேள்வி 21**

ஆயர் தம் மறைமாவட்டத்தோடு ஒருவித ஞான உறவினால் ஒன்றித்திருக்கிறார் என்பதைக் குறிப்பது எது?

திருவழிபாடு எண் -42 (147)

[ ] செங்கோல்

[ ] சிலுவை

[ ] தலைச்சீரா

[ ] மோதிரம்

**கேள்வி 22**

ஆயர் அணியும் மோதிரத்தை முத்தம் செய்வது எதன் அறிகுறி?

திருவழிபாடு எண் -42 (147)

[ ] அமைதிக்கும், தாழ்ச்சிக்கும்

[ ] மரியாதைக்கும் மகிழ்ச்சிக்கும்

[ ] அன்புக்கும், பணிவுக்கும்

[ ] நம்பிக்கைக்கும், பணிவாழ்வுக்கும்

**கேள்வி 23**

ஆயர் அணியும் மார்புச்சிலுவை எதை நினைவுப்படுத்துகின்றன?

திருவழிபாடு எண் -42 (148)

[ ] பாரமான சிலுவை

[ ] அதிகாரம்

[ ] அன்பு

[ ] தாழ்ச்சி

**கேள்வி 24**

ஆடம்பரமான நேரங்களில் திருத்தந்தை தம் தலைமீது அணிந்து கொள்வது என்ன?

திருவழிபாடு எண் -43 (150)

[ ] முகக்கீரிடம்

[ ] தொப்பி

[ ] கீரிடம்

[ ] தலைச்சீரா

**கேள்வி 25**

திருத்தந்தை அணிந்து கொள்ளும் மோதிரத்திற்கு என்ன பெயர் வழங்கப்படுகிறது?

திருவழிபாடு எண் -43 (151)

[ ] மண ஒப்பந்த மோதிரம்

[ ] பிறந்த நாள் மோதிரம்

[ ] மீன் பிடிப்பவருடைய மோதிரம்

[ ] திருமண மோதிரம்

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.